SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

EDB SRI LANKA

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

விலைமனுக்களுக்கான அழைப்பு

செயற்பாட்டு குத்தகை முறை ஒன்றில் ஐந்து மோட்டார் வாகனங்களின் பெறுகை

ஒப்பந்த இல.: EDB/PU/NCB/2026/09

1. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு (EDB) செயற்பாட்டு குத்தகை முறை ஒன்றில் ஐந்து மோட்டார் வாகனங்களின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதி பெற்ற விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

   - **Sedan** அல்லது **SUV** வாகனங்கள்

2. தேசிய பெறுகை வழிகாட்டல் 2024 இல் குறிப்பிடப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB – ஒற்றைக் கட்ட ஒற்றைக் கடிதவுறை விலைமனு நடைமுறை) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு அந்த வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கும் திறந்துள்ளது. ஒப்பந்தக் காலம் 36 மாதங்களாகும்.

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும், சமர்ப்பிக்கும் நேரத்தில் எந்தவொரு அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறை நிர்வாகத்தினாலும் இடைநிறுத்தம் அல்லது தடை செய்யப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4. தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோலில் பின்வருவன அடங்கும், (மேலதிக தகைமை தேவைகள் பெறுகை ஆவணங்களில் தரப்பட்டுள்ளன)

   ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமையில் உள்ளடங்குவன -

   - விலைமனுதாரர், இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   - வாடகைக்கு வழங்கப்படும் வாகனங்கள், வாடகைக்கு அமர்த்தப்படும் நேரத்தில் 150,000 கிலோமீற்றருக்கும் குறைவான மொத்தப் பயணத் தூரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், அவ்வாகனங்கள் 2023 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று (03) ஆண்டுகளுக்குள் செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் மோட்டார் வாகனங்களை வழங்கிய அனுபவத்திற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB–EDB கோபுரம், கட்டம் 06, உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2026 நவம்பர் 18 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை ஆர்வமுடைய தரப்புகளினால் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம். இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் **www.srilankabusiness.com/announcements/** என்ற இணையதளத்தில் உள்ள "அறிவிப்புகள்" (Announcements) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பெறுகை ஆவணத்தை அணுகுவதன் மூலமும், விலைமனு ஆவணங்களைப் பார்வையிட முடியும்.

6. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 42, NDB–EDB கோபுரம், கட்டம் 06, பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம். தொலைபேசி: 011-2300702; மின்னஞ்சல்: disna@edb.gov.lk.

7. பொருந்தக் கூடிய மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவைச் செலுத்தி பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் (EDB) இருந்து ஆர்வமுடைய தகுதி பெற்ற விலைமனுதாரர்களால் ஆங்கிலத்திலான விலைமனு ஆவணங்களில் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். அசல் பற்றுச்சீட்டு விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். கொடுப்பனவின் தேவையான அத்தாட்சி இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

8. விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து எழுபத்து ஏழு (77) நாட்காட்டி தினங்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

9. அசல் விலைமனு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் மூடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்: "EDB/PU/NCB/2026/09- செயற்பாட்டு குத்தகை முறை ஒன்றில் ஐந்து மோட்டார் வாகனங்களின் பெறுகை"

10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2026 நவம்பர் 19 ஆம் திகதி பி.ப. 02.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர் பெறுகைக் குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கட்டம் 06, NDB–EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு சேர்த்தல் அல்லது பெறுகைப் பிரிவில் உள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபா ஒரு இலட்சத்து முப்பதாயிரம் (இ.ரூபா 130,000.00) தொகையில் பெறுகை ஆவணத்தில் தரப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தி வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவில் விலைமனு பிணை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்/ விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 7ஆவது மாடி சிறிய மாநாட்டு அறையில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அதே நாள் பி.ப. 02.45 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

12. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு EDB இன் 9ஆவது மாடி சபை அறையில் 2026 நவம்பர் 12 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும். அனைத்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

தலைவர்/ CEO
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)
இல. 42, நவம் மாவத்தை,
கொழும்பு 02
2026 நவம்பர் 06